செ.வெ.எண்:03 நாள்:01.09.2021

**திருப்பூர் வடக்கு மற்றும் திருப்பூர் தெற்கு வட்டங்களில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நவீன கருவிகள் மூலம் மறுநிலஅளவைப் பணி மேற்கொள்ளப்பட்டு, நிலஅளவை ஆவணங்கள் மின்ஆளுமை (Digital Technology) முறையில் தயார் செய்யப்பட்டு தற்போது நில ஆவண தரவுகள் இணையவழிச்சேவைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதில் பெயர் மாற்றம் மற்றும் திருத்தங்கள் இருப்பின் பொதுமக்கள் பொதுச்சேவை மையத்தில் உரிய ஆதாரங்களுடன் மனு செய்தால் ஆதாரங்கள் பரிசீலிக்கப்பட்டு திருத்தங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நவீன தொழில்நுட்பம் மூலம் (Total Station மற்றும் DGPS) மறுநிலஅளவைப் பணி மேற்கொண்டு நிலஅளவை புலங்களிலுள்ள பரப்புகளின் வேறுபாடுகளை களைந்து துல்லியமான நிலஅளவைப் பணி மேற்கொண்டு மின்னனு முறையில் நிலஅளவை ஆவணங்களை (Digital Land Records) தயார் செய்ய அரசு ஆணை எண்: 733 வருவாய்த்துறை (நி.அ.2(1)) நாள்: 14.11.2006 மற்றும் அரசு ஆணை எண்: 520 வருவாய்த்துறை (நி.அ.2(1)) நாள்: 11.09.2007-ன் படி 1923 தமிழ்நாடு நிலஅளவை மற்றும் எல்லைகள் சட்டம் பிரிவு-5 -ன் கீழ் தமிழ்நாடு அரசிதழிலும் மாவட்ட அரசிதழிலும் அறிவிக்கை வெளியிடப்பட்டதன்பேரில், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு மற்றும் திருப்பூர் தெற்கு வட்டங்களில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நவீன கருவிகள் மூலம் மறுநிலஅளவைப் பணி மேற்கொள்ளப்பட்டு, நிலஅளவை ஆவணங்கள் மின்ஆளுமை (Digital Technology) முறையில் தயார் செய்யப்பட்டு தற்போது நில ஆவண தரவுகள் இணையவழிச்சேவைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஏற்கனவே திருப்பூர் நகரத்தில் இருந்த 15 நிலஅளவை வார்டுகளில் தற்போது திருப்பூர் வடக்கு வட்டத்தில் உள்ள 8 வார்டுகளில் பழைய A வார்டு (7 பிளாக்குகள்) என்பது தற்போது A வார்டு (136 பிளாக்குகள்) எனவும், பழைய B வார்டு (5 பிளாக்குகள்) தற்போது B வார்டு (117 பிளாக்குகள்) எனவும், பழைய C வார்டு (27 பிளாக்குகள்) தற்போது

C வார்டு (152 பிளாக்குகள்) எனவும், பழைய D வார்டு (15 பிளாக்குகள்) தற்போது D வார்டு (125 பிளாக்குகள்) எனவும், பழைய E வார்டு (13 பிளாக்குகள்) தற்போது E வார்டு (165 பிளாக்குகள்) எனவும், பழைய F வார்டு (15 பிளாக்குகள்) தற்போது F வார்டு (249 பிளாக்குகள்) எனவும், பழைய J வார்டு (54 பிளாக்குகள்) தற்போது G வார்டு (210 பிளாக்குகள்) எனவும், பழைய K வார்டு (64 பிளாக்குகள்) தற்போது H வார்டு (257 பிளாக்குகள்) எனவும் பிரிக்கப்பட்டுள்ள.

திருப்பூர் தெற்கு வட்டத்தில் உள்ள 7 வார்டுகளில் பழைய L வார்டு (7 பிளாக்குகள்) தற்போது A வார்டு (73 பிளாக்குகள்) எனவும், பழைய M வார்டு (34 பிளாக்குகள்) தற்போது B வார்டு (300 பிளாக்குகள்) எனவும், பழைய P வார்டு (8 பிளாக்குகள்) தற்போது C வார்டு (33 பிளாக்குகள்) எனவும், பழைய H வார்டு (16 பிளாக்குகள்) தற்போது D வார்டு (120 பிளாக்குகள்) எனவும், பழைய G வார்டு (11 பிளாக்குகள்) தற்போது E வார்டு (76 பிளாக்குகள்) எனவும், பழைய N வார்டு (19 பிளாக்குகள்) தற்போது F வார்டு (69 பிளாக்குகள்) எனவும், பழைய O வார்டு (11 பிளாக்குகள்) தற்போது G வார்டு (123 பிளாக்குகள்) எனவும், மாற்றியமைக்கப்பட்டு நகர நிலஅளவை ஆவணங்கள் பராமரிப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. பழைய நகரளவை புல எண்களுக்கு தொடர்புடைய புதிய நகரளவையின் பிளாக் எண்கள், நகரபுலஎண்கள் விபரத்தை பொதுமக்கள் தெளிவாக தெரிந்துகொள்ளும் வகையில் ஒப்புமை தொடர்பு பட்டியல் திருப்பூர் மாவட்ட இணையதளத்தில் (tiruppur.nic.in) வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வசதியை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறும், நகரநிலஅளவை ஆவணங்கள் இணையவழிச்சேவைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதால், அதில் பெயர் மாற்றம் மற்றும் திருத்தங்கள் இருப்பின் பொதுமக்கள் பொதுச்சேவை மையத்தில் உரிய ஆதாரங்களுடன் மனு செய்தால் ஆதாரங்கள் பரிசீலிக்கப்பட்டு திருத்தங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

| நகரசார் ஆய்வாளர் | திருப்பூர் வடக்கு | திருப்பூர் தெற்கு |
|---|---|---|
| செல்பேசி எண | 94426-79381 | 75022 - 49434 |
| Email.Id | adsurvey.tntpr@nic.in | |

**<u>திருப்பூர் வடக்கு வட்டம்:</u>**

| தற்போதுள்ள வார்டு | புதியதாக மாறுதல் செய்யும் வார்டு |
|---|---|
| **A** | **A** |
| **B** | **B** |
| **C** | **C** |
| **D** | **D** |
| **E** | **E** |
| **F** | **F** |
| **J** | **G** |
| **K** | **H** |

**<u>திருப்பூர் தெற்கு வட்டம்:</u>**

| தற்போதுள்ள வார்டு | புதியதாக மாறுதல் செய்யும் வார்டு |
|---|---|
| **L** | **A** |
| **M** | **B** |
| **P** | **C** |
| **H** | **D** |
| **G** | **E** |
| **N** | **F** |
| **O** | **G** |

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.